நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 83/2022**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | முத்துராஜ் |
| தந்தை / கணவர் பெயர் | : | அம்மாசி |
| கிராமம் | : | கூராண்டிபுதூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 55 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**மனுவின் பேரில் திரும்ப அழைக்கபட்டு குறுக்கு விசாரணை**(விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 11.55 A.M.)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. விபத்து நடந்தபோது நான் வீட்டில் இருந்தேன். எனது வீட்டுக்கும் விபத்து நடந்த இடத்திற்கும் 200 மீட்டர் இடைவெளி இருக்கும். விபத்து நடந்த உடனே நான்

சம்பவ இடத்திற்கு சென்று விட்டேன். என் அம்மாவுக்கு விபத்தின் போது சுமார் 70 வயது இருக்கும். எனது அம்மா தான் மேட்டூரில் இருந்து பவானி செல்லும் பைபாஸ் சாலையில் மாடு பிடிப்பதற்காக அஜாக்கிரதையாக சாலையை கடக்கும் போது இந்த விபத்தை ஏற்பட்டது என்றால் சரியில்லை. மதியம் 1 மணியிலிருந்து 1:30 மணிக்குள் விபத்து நடந்திருக்கும்.

2. நானும் எனது மகனும் ஒன்றாகத்தான் இருந்தோம் விபத்து நடந்த உடன் ஒன்றாக சம்பவ இடத்திற்கு சென்று விட்டோம். அதன்பிறகு கால் மணி நேரம் கழித்து முருகேஷ், அருண், துரைராஜ் பூபதி ஆகியோர் சம்பவ இடத்திற்கு வந்தார்கள்.
3. என் அம்மாவை நான் பார்க்கும் போது இரண்டு காலும் உடைந்து வெளியே வந்துவிட்டது. என் அம்மா மேலே பறந்து போய் கீழே Showset மீது விழுந்து நெற்றியில் அடிபட்டிருந்தது. ஆம்புலன்ஸில் நானும் எனது மகனும் மருத்துவமனைக்கு எனது அம்மாவை கொண்டு செல்லும்போது சென்றோம். அங்கு சென்றதும் பரிசோதித்து பார்த்துவிட்டு இறந்து விட்டதாக சொன்னார்கள். என் அம்மாவுக்கு கண் பார்வை குறைவு என்றாலும் கூன் விழுந்தது போல் நடந்து செல்வார் என்றாலும் சரியல்ல. வழக்குக்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான் காவல்துறையில் புகார் கொடுத்தேன். அரசு மருத்துவமனைக்கு போலீசார் வரும்போது புகார் கொடுத்தேன்.
4. எழுதிக் கொடுத்த பேப்பரில் கையொப்பம் செய்தேன் எத்தனை கையொப்பம் செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது சொந்தக்காரர் ஒருவர் அங்கு வந்திருந்தார். அவர் எழுதிக் கொடுத்ததில் நான் கையொப்பம் செய்தேன். மேற்படி எழுதிக் கொடுத்த எனது உறவினர் பெயர் அருண். நான் மேலே சொன்ன அருண் தான் அவர் அவர் என்னுடைய அண்ணன் மகன் ஆவார். எத்தனை புகார் எழுதி கொடுத்தார்கள் என்றும் நான் எத்தனை கையெழுத்து போட்டேன் என்று எனக்கு பதட்டத்தில் ஞாபகம் இல்லை.
5. நான் வெற்றுத் தாளில் கையொப்பம் எதுவும் செய்யவில்லை. மேற்படி விபத்து நடந்த ரோடு தென் வடலாக செல்லும் ரோடு ஆகும் அந்த ரோட்டில் மேற்கு புறமாக எங்களது வீடு உள்ளது. எங்களது வீட்டில் இருந்து கிழக்கு நோக்கி

மாடு பிடித்து வருவதற்காக எனது அம்மா சென்றார். சாட்சி முதலில் நடுரோட்டில் விபத்து ஏற்பட்டதாக கூறிவிட்டு அதன் பிறகு மண் ரோட்டை தாண்டியதும் தார் ரோட்டுக்கு வந்ததும் விபத்து ஏற்பட்டதாக கூறுகிறார்.

6. அரசு மருத்துவமனையில் இருக்கும் போது போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு சம்பவ இடத்தில் மற்றவர்களை விசாரணை செய்தார்கள். சம்பவ இடத்தில் விசாரணை செய்யும் போது நான் அரசு மருத்துவமனையில் இருந்தேன். சம்பவம் நடந்த அன்று வீட்டு அருகில் ஒரு முறை விசாரித்தார்கள். வீட்டின் அருகில் விசாரிக்கும் போது என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை. மாலை 3 மணி அளவில் சம்பவம் நடந்த அன்று எனது வீட்டருகில் என்னை விசாரித்து இருப்பார்கள்.
7. சம்பவம் நடந்தது மதியம் 1.30 மணி என்று நான் சொல்லி உள்ள நிலையில் 3 மணிக்கு எவ்வாறு வீட்டுக்கு வந்தேன் என்றால் நான் மூன்று மணிக்கு வரவில்லை மாலை 6:00 மணி சுமாருக்கு தான் வீட்டுக்கு வந்தேன் என சாட்சி தற்போது மாற்றி சொல்கிறார். மாலை 6:00 மணிக்கு நான் வீட்டுக்கு வரும்போது நான் எனது மனைவி எனது அப்பா மற்றும் சொந்த பந்தங்கள் ஆகியோர் எனது வீட்டில் இருந்தார்கள்.
8. மேற்படி ஆறு மணிக்கு எனது மகன் சண்முகவேலும் எங்களுடன் இருந்தார். மறுநாள் தான் உடலை ஒப்படைப்பதாக தெரிவித்ததால் மருத்துவமனையில் நாங்கள் யாரும் இல்லை வீட்டுக்கு திரும்பி வந்து விட்டோம். இரண்டு போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலீசார் தலைமை காவலரா உதவி ஆய்வாளரா என்று எனக்கு தெரியவில்லை. என்னிடம் தனிப்பட்ட முறையில் காவல் ஆய்வாளர் யாரும் வாக்குமூலம் வாங்க வில்லை.
9. நான் சொல்வதெல்லாம் பொய் என்றாலும் எனது அம்மா தான் கவன குறைவாக சாலை கடந்து சென்றதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், நான் நடந்த சம்பவங்களை மாற்றி மாற்றி சாட்சியம் அளிப்பதால் நான் சொன்னவாறு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.20 PM

மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.

ஒம்/−நா.கோபாலகிருஷ்ணன்,
நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 83/2022**

**P.W. 7 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | முருகேசன் |
| தந்தை / கணவர் பெயர் | : | அய்யம்பெருமாள் |
| கிராமம் | : | நவப்பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 7** |
| வயது | : | 53 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 10–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.25PM )

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. விபத்து நடந்த பிறகு சம்பவ இடத்துக்கு வந்து அந்த அம்மா கீழே கிடந்ததை பார்த்தேன். எந்த வண்டி மோதி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரி அல்ல இனோவா கார்

தான் விபத்தை ஏற்படுத்தியது. அந்த காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. நான் அந்த சமயத்தில் திமுக கவுன்சிலராக பதவியில் இருந்தேன். பொதுவாக எங்களது பகுதியில் விபத்து ஏற்பட்டால் நான் போய் பார்ப்பேன் என்றால் சரிதான்.

2. நான் தான் காவல்துறைக்கும் ஆம்புலன்ஸ்க்கும் தகவல் சொன்னேன். ஜி எச் எடுத்து செல்வதற்கும் ஏற்பாடு செய்தேன். இறந்து போன நபர் எனக்கு உறவினர் அல்ல. சம்பவம் நடந்து சுமார் 20 நிமிடம் கழித்து நான் சம்பவ இடத்திற்கு சென்று இருப்பேன். 20 நிமிடம் கழித்து சம்பவ இடத்திற்கு சென்றதால் யாருடைய கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். யார் அந்த காரை ஓட்டி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.35PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**

நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 83/2022**

**P.W. 6 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகவேல் |
| தந்தை / கணவர் பெயர் | : | முத்துராஜ் |
| கிராமம் | : | சூராண்டிபுதூர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 6** |
| வயது | : | 24 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுன் மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 12.35PM)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் எம் சி ஏ படித்துள்ளேன். நானும் அப்பாவும் ரோட்டில் தான் நின்று கொண்டிருந்தோம். சம்பவம் நடந்தவுடன் சம்பவ இடத்துக்கு வந்து விட்டோம். டமார் என்று சத்தம் கேட்ட பிறகுதான் திரும்பிப் பார்த்தோம் என்றால் சரிதான். நானும் எனது அப்பாவும் எனது பாட்டியை மருத்துவமனைக்கு ஆம்புலன்சில்

அழைத்துச் சென்றோம். எனது பெரியப்பா மகன் அருண் என்பவர் தான் புகார் கொடுத்தார். போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து என்னை விசாரித்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை.

2. எனது பாட்டிக்கு 60 வயதுக்கு மேல் இருக்கும். என் பாட்டிக்கு சுகர் மற்றும் ரத்த கொதிப்பு இருந்து கண் சரியாக தெரியாது என்றால் சரியல்ல நார்மலாக தான் இருந்தார். விபத்து சமயத்தில் நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. நான் எம் சி ஏ படித்துக் கொண்டிருந்தேன். சம்பவம் நடந்த அன்று விடுமுறை என்பதால் வீட்டில் தான் இருந்தேன். சம்பவம் நடந்த அன்று என்ன கிழமை என்று எனக்கு ஞாபகம் இல்லை.
3. விபத்துக்கு மறுநாள் எனது பாட்டியை அடக்கம் செய்தோம். விபத்து சம்பந்தப்பட்ட காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. அதை யார் ஓட்டி வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டபோது நான் கையொப்பம் செய்தேன். எத்தனை கையொப்பம் செய்தேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. எதுக்காக கையெழுத்து செய்தேன் என்று எனக்கு தெரியாது எழுதிய பேப்பரில் கையொப்பம் செய்தேனா எழுதாத பேப்பரில் கையொப்பம் செய்தேனா என்று எனக்கு தெரியாது.அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள்.
4. எனது பாட்டி வயது முதிர்வு காரணமாக கவன குறைவாக சாலை கடந்தால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றாலும், இறந்து போன நபர் எனது பாட்டி என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் நான் நேரில் பார்க்காத சம்பவத்தை நேரில் பார்த்தது போல் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரி அல்ல. எனது பாட்டிக்காக வேண்டி மாற்றி மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியில்லை

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–12.45PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**